# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்


எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044– 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்:267 to 305/பேரூ/2025**

**நாள் : 21 .08.2026**

A. வசந்தராஜன்,
செல்லூர்,
மதுரை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

1. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திருநெல்வேலி மண்டலம், திருநெல்வேலி.
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
மதுரை மண்டலம், மதுரை.
3. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
சிவகங்கை மண்டலம், சிவகங்கை.

- எதிர் மனுதாரர்கள்

மதுரை மாவட்டம், செல்லூர், 27/1, ஜீவானந்தம் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. A. வசந்தராஜன் என்பவரது 29.07.2025 நாளிட்ட 39 முறையீட்டு மனுக்கள் இம்முறைமன்ற நடுவத்தில் 30.07.2025 அன்று பெறப்பட்டு, 267 முதல் 305 வரை/பேரூ/2025 என எண்களிடப்பட்ட முறையீட்டு மனுக்களாக பதிவு செய்யப்பட்டன. முறையீட்டு மனுதாரரின் மனுக்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை மாவட்டம், செல்லூர், 27/1, ஜீவானந்தம் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. A. வசந்தராஜன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த 29.07.2025 நாளிட்ட 39 புகார் மனுக்களில் கீழ்க்காணும் 39 பேரூராட்சிகளில் 2025-26ஆம் ஆண்டிற்கு பேரூராட்சிக்கு தேவையான பொது சுகாதாரப் பொருட்கள், தெருவிளக்கு பொருட்கள் மற்றும் குடிநீர் பொருட்களுக்கு கொள்முதல் செய்ய சில பேரூராட்சிகளில் ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யாமலும் மற்றும் சில பேரூராட்சிகளில் ஒப்பந்தப்புள்ளி கோராமலும் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக ஒருமித்த புகாரினை தெரிவித்துள்ளார்.

39 பேரூராட்சிகளின் விவரம் பின்வருமாறு:-

### I. தூத்துக்குடி மாவட்டம் (மொத்தம் 13 புகார் மனுக்கள்)

பேரூராட்சிக்கு தேவையான பொருட்களை கொள்முதல் செய்ய இணையதளம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோராமல் முறைகேடாக குறிப்பிட்ட நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய

பேரூராட்சிகள்

1. கழுகுமலை பேரூராட்சி
2. கடம்பூர் பேரூராட்சி
3. ஆறுமுகநேரி பேரூராட்சி
4. ஆழ்வார்திருநகரி பேரூராட்சி
5. தென்திருப்பேரை பேரூராட்சி
6. விளாத்திக்குளம் பேரூராட்சி
7. கானம் பேரூராட்சி
8. எட்டையபுரம் பேரூராட்சி
9. கயத்தார் பேரூராட்சி
10. சாத்தான்குளம் பேரூராட்சி
11. ஸ்ரீவைகுண்டம் பேரூராட்சி
12. ஏரல் பேரூராட்சி
13. V. புதூர் பேரூராட்சி

**II. தென்காசி மாவட்டம் (மொத்தம் 10 புகார் மனுக்கள்)**

(i) பொருட்களை கொள்முதல் செய்ய இணையதளம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோராமல் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு முறைகேடாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய பேரூராட்சிகள்

1 வடகரை கீழ்பிடாகை பேரூராட்சி
2 சுந்தரபாண்டியபுரம் பேரூராட்சி
3 குற்றாலம் பேரூராட்சி

**தென்காசி மாவட்டம்**

(ii) ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யாமல் முறைகேடாக குறிப்பிட்ட நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கும் வகையில் **மறுஒப்பந்தப்புள்ளி** கோரவுள்ள பேரூராட்சிகள்

1 சிவகிரி பேரூராட்சி
2 ஆழ்வார்குறிச்சி பேரூராட்சி
3 S. புதூர் பேரூராட்சி
4 ஆலங்குளம் பேரூராட்சி
5 இலஞ்சி பேரூராட்சி
6 அச்சன்புதூர் பேரூராட்சி
7 கீழ்ப்பாவூர் பேரூராட்சி

**III திருநெல்வேலி மாவட்டம் (மொத்தம் 6 புகார் மனுக்கள்)**

பேரூராட்சிக்கு தேவையான பொருட்களை கொள்முதல் செய்ய இணையதளம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோராமல் முறைகேடாக குறிப்பிட்ட நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய பேரூராட்சிகள்

1. திசையன்விளை பேரூராட்சி
2. சங்கர்நகர் பேரூராட்சி

ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யாமல் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி வழங்க முறைகேடாக மறுஒப்பந்தப்புள்ளி கோரவுள்ள பேரூராட்சிகள்

1. கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி
2. மணிமுத்தாறு பேரூராட்சி
3. வீரவநல்லூர் பேரூராட்சி
4. நாரணம்மாள்புரம் பேரூராட்சி

**IV மதுரை மாவட்டம் (மொத்தம் 9 புகார் மனுக்கள்)**

பேரூராட்சிக்கு தேவையான பொருட்களை கொள்முதல் செய்ய இணையதளம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோராமல் முறைகேடாக குறிப்பிட்ட நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய பேரூராட்சிகள்

1 அலங்காநல்லூர் பேரூராட்சி
2 ஏழுமலை பேரூராட்சி
3 சோழவந்தான் பேரூராட்சி
4 பரவை பேரூராட்சி
5 பாலமேடு பேரூராட்சி
6 T. கல்லுப்பட்டி பேரூராட்சி
7. வாடிப்பட்டி பேரூராட்சி
8. A. வல்லாளப்பட்டி பேரூராட்சி
9. பேரையூர் பேரூராட்சி

**V சிவகங்கை மாவட்டம் (1) புகார் மனு**

ஒப்பந்தப்புள்ளி பல இனங்களாகப் பிரிக்கப்பட்டு முடிவு செய்யாமல், குறிப்பிட்ட நிறுவனத்திற்கு முறைகேடாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள பேரூராட்சி

1. புதுவயல் பேரூராட்சி

எனவே தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற சட்டம் மற்றும் விதிகளுக்கு புறம்பாக தன்னிச்சையாக பேரூராட்சிகளின் பொருட்கள் கொள்முதல் செய்த நடவடிக்கை குறித்து தெரிவித்துள்ள எனது புகார் மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் 39 புகார் மனுக்கள் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 08.08.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் (i) திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், (ii) மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மற்றும் (iii) சிவகங்கை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ஆகியோரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. மூன்றாம் எதிர்மனுதாரரான சிவகங்கை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது 14.10.2025 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 2728/2025-டி1-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம், புதுவயல் பேரூராட்சியில் 2025-2026ஆம் ஆண்டிற்கு 01.04.2025 முதல் 31.03.2026 வரையுள்ள காலங்களுக்கு பேரூராட்சி பொது சுகாதாரம், குடிநீர் விநியோக பராமரிப்பு, தெரு விளக்கு பராமரிப்பு மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணி உள்ளிட்ட பணிகளுக்கு இப்பேரூராட்சிக்கு பொருட்கள் சப்ளை செய்வதற்கு, தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000ன்படி தெரிவிக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளின்படி புதுவயல் பேரூராட்சியின் வருடாந்திர இரு உறை இணையதள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண். 89/2025, நாள் 20.03.2025ன்படி ஒவ்வொரு பணிகளுக்கும், 03.04.2025ஆம் தேதி இணையதள வழியாக பிற்பகல் 3.00 மணிவரை தனித்தனியாக கீழ்க்கண்டவாறு அட்டவணையில் உள்ள 10 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கு அறிவிப்பு வெளியிடப்பட்டு, பேரூராட்சி தகவல் பலகையில் ஒட்டப்பட்டும், பின்னர், சிவகங்கை மாவட்ட உள்ளூர் தமிழ் நாளிதழில் வெளியிடப்பட்டும் மற்றும் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அரசு அலுவலகங்கள், பிற அரசு அலுவலகங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி புதுவயல் பேரூராட்சி செயல் அலுவலரால் அனுப்பி வைக்கப்பட்டு, அதன்படி கடந்த 03.04.2025 அன்று கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

அவ்வாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் கீழ்க்காணும் நிறுவனங்கள் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதாக செயல் அலுவலரால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விவரம் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி | தொழில்நுட்ப தகுதி பெற்ற ஒப்பந்தப்புள்ளி (அட்டவணை இணைக்கப்பட்டுள்ளது) |
|---|---|---|---|
| 1 | பொது சுகாதார பராமரிப்பிற்கு தேவையான பிளீச்சிங் பவுடர், பினாயில் சுண்ணாம்பு வழங்குதல் | 1. திருமலை டிரேடர்ஸ்<br>2.சந்திரா ஏஜென்ஸிஸ்<br>3.செந்தூர் டிரேடர்ஸ் | 1.திருமலை டிரேடர்ஸ்<br>2.செந்தூர் டிரேடர்ஸ் |
| 2 | தெரு விளக்கு பராமரிப்பிற்கான உபகரணங்கள் வழங்குதல் (LED Light) தவிர்த்து பிற விளக்குகள் | 1.வேணி எலக்ட்ரிக்கல்ஸ்<br>2.ராஜலெட்சுமி ஏஜென்ஸிஸ்<br>3.கருப்பர் ஏஜென்ஸிஸ்<br>4.சக்தி டிரேடர்ஸ் | 1.வேணி எலக்ட்ரிக்கல்ஸ்<br>2..கருப்பர் ஏஜென்ஸிஸ்<br>3.சக்தி டிரேடர்ஸ் |
| 3 | பொது சுகாதார பராமரிப்பிற்கு தேவையான தளவாடப் பொருட்கள் வழங்குதல் | 1. சந்திரா ஏஜென்ஸிஸ்<br>2.அலமேலு பேன்ஸிஸ் ஸ்டோர்ஸ் | 1. அலமேலு பேன்ஸிஸ் ஸ்டோர்ஸ் |
| 4 | குடிநீர் பராமரிப்புகளுக்கு தேவையான உதிரி பொருட்கள் வழங்குதல் மற்றும் குடிநீர் பராமரிப்பு பணிகளுக்கு தேவையான மின் மோட்டார்கள் மற்றும் பேனல் போர்டு வழங்குதல் | 1.வேணி எலக்ட்ரிக்கல்ஸ்<br>2.கவி எண்டர்பிரைசஸ்<br>3.எஸ்.ஆர்.எஸ். டிரேடர்ஸ் | 1.வேணி எலக்ட்ரிக்கல்ஸ்<br>2.கவி எண்டர்பிரைசஸ் |
| 5 | அலுவலக பயன்பாட்டிற்கு எழுதுபொருட்கள் வழங்குதல் மற்றும் அலுவலக ஆவணங்கள் ஜெராக்ஸ் எடுத்து கொடுத்தல் | 1.சக்தி டிரேடர்ஸ் | ஒற்றை ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட்டதால் நிராகரிக்கப்பட்டது. |
| 6 | கணினி பராமரிப்பிற்கு டோனர் வழங்குதல் / ரீபிள் செய்தல் மற்றும் கணினி பழுது நீக்கம் செய்தல் | ஒப்பந்தப்புள்ளி எவரும் அளிக்கவில்லை. | - |
| 7 | ஆழ்குழாய் கிணறுகளில் உள்ள மின்மோட்டார் பழுது நீக்குதல் மற்றும் ரீவைண்டிங் செய்தல், மழைநீர் வடிகால் மற்றும் குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை அகற்ற மண்வெட்டும் வேலை செய்தல், பேரூராட்சி பகுதியில் குடிநீர் குழாய் பராமரிப்பு மற்றும் பழுதுநீக்கம் செய்தல். | 1.முருகானந்தம் எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ்<br>2.கவி எண்டர்பிரைசஸ் | 1.முருகானந்தம் எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ்<br>2.கவி எண்டர்பிரைசஸ் |
| 8 | பேரூராட்சியில் துப்புரவுப் பணிகள் மேற்கொள்வதற்கு ஜே.சி.பி. இயந்திரம் வாடகைக்கு அளித்தல் மற்றும் பேரூராட்சியில் துப்புரவுப் பணிகள் மேற்கொள்வதற்கு டிராக்டர் இயந்திரம் வாடகைக்கு அளித்தல். | ஒப்பந்தப்புள்ளி எவரும் அளிக்கவில்லை. | - |

| | | | |
|---|---|---|---|
| 9 | பேரூராட்சியில் தள்ளுவண்டிகள் மற்றும் கொசு மருந்து இயந்திரம் பழுதுநீக்கம் செய்தல் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் வடகிழக்கு பருவமழை பாதுகாப்பு உபகரணங்கள் சப்ளை செய்தல் | 1.சந்திரா ஏஜென்ஸிஸ்<br>2.கவி எண்டர்பிரைசஸ் | 1.கவி எண்டர்பிரைசஸ் |
| 10 | பொது சுகாதார பராமரிப்பிற்கு தேவையான கொசு மருந்து அடிக்கும் சிறிய மற்றும் பெரிய இயந்திரம், சிலிண்டர், திரவம், அபேட், கொசு மருந்துகள் வழங்குதல். | 1.திருமலை டிரேடர்ஸ்<br>2.சந்திரா ஏஜென்ஸிஸ்<br>3.சக்தி டிரேடர்ஸ் | 1.திருமலை டிரேடர்ஸ் |

மேற்குறிப்பிட்டவாறு இணையதளம் வாயிலாக பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மேற்காணும் பட்டியலில் வ.எண். 6 மற்றும் 8ல் காணும் இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. வ.எண். 5ல் காணும் இனத்திற்கு ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது.

மேற்காணும் 3 இனங்கள் தவிர்த்து, ஏனைய 7 இனங்களுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதிகளாக நிர்ணயிக்கப்பட்ட இனங்களை பரிசீலித்து, தொழில்நுட்ப தகுதி பெற்ற நிறுவனங்களுக்கு இணையதளம் வாயிலாக வரப்பெற்ற விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டு, குறைந்த விலைப்புள்ளிகள் அளித்த நிறுவனங்களுக்கு புதுவயல் பேரூராட்சி மன்ற தீர்மான எண். 227 நாள் 15.04.2025ன்படி பணி உத்தரவு அளித்திட தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

இவற்றில் தொழில்நுட்ப தகுதியின் அடிப்படையில் நிராகரிக்கப்பட்ட காரணங்கள் செயல் அலுவலரால் பட்டியலிடப்பட்டுள்ளது. அதனை இத்துடன் இணைத்துள்ளேன்.

1. 2025–26ஆம் ஆண்டுக்கான பேரூராட்சிக்கு தேவையான பொது சுகாதாரம் பொருட்கள் ஒப்பந்தப்புள்ளியானது பேரூராட்சி நிர்வாக அதிகாரி ஒப்பந்ததாரரிடம் அதிக பணம் பெற வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், பல இனங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. பிற மாவட்டங்களில் ஒப்பந்தப்புள்ளி இப்படி பல இனங்களாக பிரிக்கப்படுவதில்லை என புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2025-26ஆம் ஆண்டிற்கு புதுவயல் பேரூராட்சிக்கு தேவையான பொது சுகாதாரம் பணிகளுக்கு தேவையான கிருமிநாசினிகளான பிளீச்சிங்பவுடர், பினாயில், சுண்ணாம்பு ஆகியவை சப்ளை செய்வதற்கு ஒரு இனமாகவும், பொது சுகாதாரப் பணிக்கு தளவாட சாமான்கள் சப்ளை செய்வதற்கு ஒரு இனமாகவும் கொசு மருந்து அடிக்கும் இயந்திரம் மற்றும் அதற்கான மருந்து பொருட்கள் உள்ளிட்ட இதர இனங்களுக்கு ஒரு இனமாகவும் குறிப்பிட்டு மூன்று இனங்களுக்கும் தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளதால் அதற்கான வைப்புத்தொகை தனித்தனியாக செலுத்தப்பட வேண்டும் என்பதால் மனுதாரரால் இப்புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் இனங்களுக்கு வைப்புத்தொகை தனித்தனியாக செலுத்தப்பட வேண்டும். இப்புகார் ஏற்புடையதல்ல.

2. எனது துணை நிறுவத்தின் மூலமாக அளித்த ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களில் கையொப்பம் இடவில்லை என்று நிராகரிக்கப்பட்டுள்ளது. இணையதளம் மூலமாக அளிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளியானது (Digital Signature) கையொப்பம் என்ற முறையில் ஆவணங்கள் பதிவேற்றம் செய்யப்படுகிறது. இந்த விபரங்கள் பேரூராட்சி நிர்வாக அதிகாரி அவர்களிடம் எடுத்துரைத்தும் அவர் செவி சாய்க்கவில்லை என புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்த விளம்பரத்தில் ஒப்பந்த நிபந்தனைகள் ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பமிட்டு ஆவணங்களை முழுமையாக எவ்வித விடுதலுமின்றி பதிவேற்றம் செய்ய வேண்டும் என செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இதில் கீழ்க்கண்டவைகள் தொழில்நுட்ப தகுதிக்கான பரிசீலனைக்கு ஒப்பந்ததாரர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் 8 இனங்கள் செயல் அலுவலரால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

1. ஜி.எஸ்.டி (GST) சான்றிதழின் நகல்
2. நிறுவனத்தின் பதிவு சான்று நகல்.
3. பான் கார்டின் நகல் (Pan card)
4. MSME சான்றிதழின் நகல்.
5. ஒப்பந்த நிபந்தனைகளின் ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பமிட்டு ஒப்பந்த ஆவணங்களை முழுமையாக எவ்வித விடுதலுமின்றி பதிவேற்றம் செய்ய வேண்டும்.
6. கடந்த மூன்று ஆண்டுகள் தொடர்ந்து தொழில் செய்தலுக்கான சான்றிதழ் உரிய அதிகாரம் பெற்ற அலுவலரிடம் சான்றொப்பம் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.
7. கடந்த மூன்று ஆண்டுகள் வருமான வரி செலுத்தியதற்கான (2021-2022, 2022-2023 மற்றும் 2023-2024) சான்றிதழ் உரிய அதிகாரம் பெற்ற அலுவலரிடம் சான்றொப்பம் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.
8. ஒப்பந்ததாரர் எந்த நிறுவனத்திலும் கருப்பு பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்பதற்கான சுய அறிவிப்பு சான்று (நிறுவனத்தின் லெட்டர்ஹெட்டில்).

புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டவாறு கையொப்பமிடப்படாத இனங்கள் செயல் அலுவலரால் நிராகரிக்கப்பட்டுள்ளது. புகார் மனுவில் துணை நிறுவனங்கள் குறித்த விபரங்கள் தெரிவிக்கப்படவில்லை. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதி பரிசீலனை செய்யப்பட்ட விபரங்களை பரிசீலித்ததில், சந்திரா ஏஜென்ஸீஸ், ராஜலெட்சுமி ஏஜென்ஸில், எஸ்.ஆர்.எஸ். டிரேடர்ஸ், ஆகிய நிறுவனங்கள் செயல் அலுவலரால் நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தகுதிக்கான இனங்களில் ஒப்பந்த நிபந்தனையில் குறிப்பிடப்பட்டவாறு ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பமிட்டு சமர்ப்பிக்கப்படவில்லை மற்றும் எந்தவொரு நிறுவனத்திலும் கருப்பு பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்பதற்கான சுய அறிவிப்பு சான்று சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் புகார் மனுவில் இணையதளம் மூலமாக அளிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளியானது டிஜிட்டல் கையொப்பம் என்ற முறையில் ஆவணங்கள் பதிவேற்றம் செய்துள்ளதாகவும், இதனை பேரூராட்சி நிர்வாக அதிகாரியிடம் தெரிவித்தும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் நிராகரிக்கப்பட்ட நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்த நிபந்தனைகள் எதிலும் கையொப்பமோ, டிஜிட்டல் கையொப்பமோ செய்யப்படவுமில்லை. டிஜிட்டல் கையொப்பம் செய்யப்பட்டதற்கான விபரங்களும் இல்லை.

3. மேலும் பொது சுகாதாரம் தளவாடம் பொருட்கள் ஒப்பந்தப்புள்ளியானது தகுதியற்றவருக்கு (Alamelu Fancy Store) AOC வழங்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் GST பதிவு மற்றும் முன் அனுபவம் இல்லாத நிறுவனம் ஆகும் என புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இனத்திற்கான ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை பரிசீலித்ததில், நியூ அலமேலு பேன்சி ஸ்டோர் நிறுவனத்தின் உரிமையாளரான அ. மணிவண்ணன் என்பவர் பெயரில் GST.No.33BLFPM8629G2ZXன்படி 02.08.2018ஆம் தேதியிட்ட சான்று பெறப்பட்டுள்ளது. காரைக்குடி நகராட்சி மற்றும் சிவகங்கை நகராட்சிகளில் பணி மேற்கொள்ள உத்தரவிடப்பட்ட நகல்கள் ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் ஒப்பந்தத்திற்கான தொழில்நுட்பத்திற்கான தகுதிகளாக 8 ஆவணங்கள் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதில் கடந்த மூன்று ஆண்டுகள் தொடர்ந்து தொழில் செய்ததற்கான சான்றிதழ் உரிய அதிகாரம் பெற்ற அலுவலரிடம் சான்றொப்பம் பெற்று சமர்ப்பிக்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது. ஆனால் நியூ அலமேலு பேன்சி ஸ்டோர் நிறுவனத்தால் காரைக்குடி நகராட்சி மற்றும் சிவகங்கை நகராட்சி ஆகிய நகராட்சிகளில் 2023-2024ஆம் ஆண்டிற்கான பொருட்கள் சப்ளை செய்ததற்கான ஆணை நகல்கள் மற்றும் 2024-25ஆம் ஆண்டிற்கு பட்டுக்கோட்டை நகராட்சியில் தொழில் செய்ததற்கான நகல் சமர்ப்பித்துள்ளார். தொழில்நுட்ப தகுதிக்கான நிபந்தனையில் மூன்று ஆண்டுகள் தொழில் செய்ததற்கான உத்தரவு நகல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கோரப்பட்டுள்ளது. ஆனால் இரண்டு ஆண்டுகள் தொழில் செய்ததற்கான உத்தரவு நகல்கள் மட்டும் இணைக்கப்பட்டுள்ளது. செயல் அலுவலரால் தொழில்நுட்ப தகுதி பரிசீலனையின் போது இதனை பரிசீலிக்காமல் AOC (Award of Contract) வழங்கப்பட்டுள்ளது.

**4.** மேலும், பொது சுகாதாரம் கொசு மருந்து பொருட்கள் ஒப்பந்தப்புள்ளியானது தகுதியற்றவருக்கு (SAKTHI TRADERS) AOC வழங்கப்பட்டுள்ளது என்றும், இந்த நிறுவனம் GST பதிவு செய்யப்பட்டு இரண்டு வருடங்கள் ஆகவில்லை என்றும், ஆனால் ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்தில் கடந்த மூன்று ஆண்டுகள் தொடர்ந்து தொழில் செய்ததற்கான சான்றிதழ் (Work order) சமர்ப்பிக்க வேண்டும் மற்றும் Income Tax Return மற்றும் GST Return சான்றிதழ் உரிய அதிகாரம் பெற்ற அலுவலரிடம் சான்றொப்பம் பெற்று சமர்ப்பிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது சுகாதாரம் கொசுமருந்து பொருட்கள் சப்ளை செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் தகுதியற்றவருக்கு (சக்தி டிரேடர்ஸ்) பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்த நிறுவனத்திற்கு ஜிஎஸ்டி பதிவு செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் நிறைவு பெறப்படவில்லை என்றும், ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்தில் கடந்த மூன்று ஆண்டுகள் தொடர்ந்து தொழில் செய்ததற்கான சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும் மற்றும் வருமான வரி தாக்கல் மற்றும் ஜிஎஸ்டி தாக்கல் சான்றிதழ் உரிய அதிகாரம் பெற்ற அலுவலரிடம் சான்றொப்பம் பெற்று சமர்ப்பிக்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி சக்தி டிரேடர்ஸ் நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்ததில் சக்தி டிரேடர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளரான திரு. சுப்ரமணியன் சக்திவேல் என்ற பெயரில் GST.No.33FATPSO73INIZ3ன்படி 09/08/2023 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி இந்நிறுவனம் ஜிஎஸ்டி பதிவு பெற்று இரண்டு ஆண்டுகள் நிறைவு பெறாத நிலையில் இதற்கான தொழில்நுட்ப தகுதி நிராகரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் தொழில்நுட்ப தகுதியினை ஏற்றுக்கொண்டு விலைப்புள்ளி திறக்கப்பட்டுள்ளது. அதன்பின்பு விலைப்புள்ளி அங்கீகரிக்க மன்றத்தின் தீர்மானத்திற்கு வைக்கப்படும்பொழுது மேற்படி நிறுவனம் மூன்று ஆண்டுகள் தொழில்நுட்ப தகுதி பெறப்படவில்லை என்பதால் மேற்படி நிறுவன விலைப்புள்ளியினை நிராகரித்து, தீர்மானிக்கப்பட்டுள்ளது. தீர்மானம் இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி இனத்திற்கு வரப்பெற்ற திருமலை டிரேடர்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை அங்கீகரித்து புதுவயல் பேரூராட்சி மன்ற தீர்மான எண். 227 நாள் 15.04.2025ன்படி பணி உத்தரவு அளித்திட தீர்மானம் பெறப்பட்டு, அதனடிப்படையில் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. சக்தி டிரேடர்ஸ் ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

**5.** பொது சுகாதார பொருட்கள் தெருவிளக்கு பொருட்கள், குடிநீர் குழாய் பொருட்கள் சப்ளைக்கு இணையதளம் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனங்களின் டெக்னிக்கல் பிட்டில் உள்ள அனைத்து நகல்களின் நகல் இணையதளத்தில் ஏன் பதிவேற்றம் செய்யப்படவில்லை என புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் கோரியவாறு, தொழில்நுட்ப உறையில் உள்ள அனைத்து நகல்களும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டியதில்லை. தொழில்நுட்ப கலந்தாய்வின் போது

ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் கூர்ந்தாய்வு செய்யப்படுகிறது. இப்புகார் ஏற்புடையதல்ல என தெரிவித்துள்ளார்".

4. ஆனால் மற்ற இரண்டு எதிர்மனுதாரர்களான திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மற்றும் மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ஆகியோரிடமிருந்து எவ்வித அறிக்கையும் பெறப்படவில்லை.

5. எனினும் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களான திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மற்றும் சிவகங்கை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ஆகியோருக்கு இம்முறைமன்றத்தில் 19.05.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு உரிய ஆவணங்கள் மற்றும் விரிவான அறிக்கையுடன் ஆஜராகுமாறு 21.04.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. இதற்கிடையில் இரண்டாம் எதிர்மனுதாரரான மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது 30.04.2026 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 3639393/2025/பே.1-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

மதுரை மாவட்டத்தில் உள்ள 9 பேரூராட்சிகளிலும் 2022-2023ஆம் ஆண்டிற்கு தெருவிளக்கு உபகரணங்கள், பொது சுகாதார தளவாட சாமான்கள், குடிநீர் உபகரணங்கள் சப்ளை செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டும், முந்தைய ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு அனுப்பப்பட்டும், ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்த நிறுவனங்களுக்கு பேரூராட்சி மன்றத் தீர்மானத்தில் அங்கீகரிக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து 2023-2024ஆம் நிதியாண்டிற்கு குடிநீர் விநியோகம், தெருவிளக்கு, பொது சுகாதாரம் பராமரிப்பு மற்றும் பொருட்கள் சப்ளை செய்தல் தொடர்பாக 2022-2023ஆம் நிதி ஆண்டில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்ட நிறுவனங்களிடமிருந்து 2023-2024ஆம் நிதியாண்டிற்கும் பொருட்கள் கொள்முதல் செய்திட பேரூராட்சி மன்றத்திடம் அனுமதி கோரப்பட்டதில், சம்பந்தப்பட்ட பேரூராட்சி மன்ற கூட்டத்தில் 2022-2023ஆம் நிதி ஆண்டில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்து அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்தே கடந்தாண்டு விலை விகிதத்திலேயே 2023-2024ஆம் ஆண்டில் பொருட்களை கொள்முதல் செய்திட தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2024-2025ஆம் நிதியாண்டிற்கு குடிநீர் விநியோகம், தெருவிளக்கு, பொதுசுகாதாரம் பராமரிப்பு மற்றும் பொருட்கள் சப்ளை செய்தல் தொடர்பாக ஒப்பந்தப்புள்ளி கோரப்படவிருந்த நிலையில் 2022-2023ஆம் நிதி ஆண்டில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்ட நிறுவனங்களிடமிருந்தே கடந்தாண்டு விலை விகிதத்திலேயே 2024-2025ஆம் நிதியாண்டிற்கும் பொருட்கள் கொள்முதல் செய்திட அனுமதியளித்தும் அனைத்து பேரூராட்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து 2025-2026ஆம் நிதியாண்டிற்கு தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு தேவையான உபகரணங்கள், குடிநீர் திட்ட மின்மோட்டார் பழுது சரி செய்தல், குடிநீர் விநியோக பராமரிப்பு பணிக்கு தேவையான உபகரணங்கள் சப்ளை செய்தல், பொது சுகாதார உபகரணங்கள் சப்ளை செய்தல் உள்ளிட்ட பணிகளுக்கு ஆன்லைன் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டதில், நிர்வாக காரணங்களுக்காக ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்ட நிலையில், 2025-2026ஆம் நிதியாண்டிற்கும் 2022-2023ஆம் நிதி ஆண்டில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்ட நிறுவனங்களிடமிருந்தே கடந்தாண்டு விலை விகிதத்திலேயே பொருட்கள் கொள்முதல் செய்திட அனுமதியளித்து அனைத்து பேரூராட்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து பரவை, அலங்காநல்லூர், சோழவந்தான், பாலமேடு, பேரையூர் மற்றும் ஏழுமலை ஆகிய பேரூராட்சிகளில் 2026-2027ஆம் நிதியாண்டிற்கு இணையவழியின் வாயிலாக ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரி அறிவிப்பு வெளியிடப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. தற்சமயம் தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடவடிக்கையில் உள்ளதால் ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்து ஒப்புதல் வழங்க இயலாத நிலையில் உள்ளது. மேலும் வாடிப்பட்டி, அ. வல்லாளப்பட்டி மற்றும் தே. கல்லுப்பட்டி ஆகிய பேரூராட்சிகளில் 2026-2027ஆம் ஆண்டிற்கு இணையவழியின் வாயிலாக ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோருவதற்கு நடவடிக்கையில் உள்ளது. மேற்படி தேர்தல் நடத்தை விதிமுறைகள் முடிவுற்ற பின்னர் பேரூராட்சி மன்ற கூட்டத்தில் மேற்படி பொருள் குறித்து அங்கீகரிக்கும்பட்சத்தில் இணையவழியின் வாயிலாக வரப்பெற்ற நிறுவனங்களுக்கு உரிய விதிமுறைகளின்படி ஒப்புதல் வழங்கப்பட உள்ளது என்ற விபரம் பணிவுடன் சமர்பிக்கப்படுகிறது என தெரிவித்துள்ளார்.

7. முதலாம் எதிர்மனுதாரரான திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது 15.05.2026 நாளிட்ட அறிக்கை ந.க.எண. 4539/2025/ப1ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

திருநெல்வேலி பேரூராட்சிகள் மண்டலத்திற்குட்பட்ட திருநெல்வேலி, தென்காசி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் உள்ள 52 பேரூராட்சிகளில், 29 பேரூராட்சிகளில், பொது மக்களுக்கான சேவைகளை வழங்கும் பொருட்டு அவற்றின் அன்றாட செயல்பாடுகளுக்கு தேவையான

1. பொதுசுகாதார பொருட்கள்,
2. தெருமின்விளக்கு உதிரி பாகங்கள்,
3. குடிநீர் திட்ட உதிரிபாகங்கள்

முதலியவற்றினை கொள்முதல் செய்யும் நடைமுறையில் அரசின் வழிகாட்டுதலின்படி மின்னணு ஒப்பந்தப்புள்ளி நடைமுறை பிற்பற்றப்படவில்லை என்பதனை அடிப்படையாக கொண்டு திருவாளர்கள் ஸ்டார் எண்டர்பிரைசஸ், செல்லூர், மதுரை என்ற நிறுவனம் அளித்துள்ள புகார்களின் விவரம்

- 2025-2026ஆம் ஆண்டுக்கான பேரூராட்சிக்கு தேவையான பொது சுகாதாரம் பொருட்கள், தெருவிளக்கு பொருட்கள், குடிநீர் குழாய் பொருட்களுக்கு இணையதளம் மூலமாக ஒப்பந்தபுள்ளி கோராமல், அதிக பணம் கொடுக்கும் சில குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு மறைமுகமாக ஒப்பந்தபுள்ளி முடித்து கொடுக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு நிதித்துறை மூலம் 30.03.2023 அன்று அரசாங்க உத்தரவு எண். 94 மற்றும் அரசாங்க உத்தரவு எண். 84/26.02.2024 வாயிலாக தமிழ்நாடு அரசாங்கத்தின் அனைத்து துறைகளிலும் கொள்முதல் செய்யப்படும் பொருட்கள் இணையதளம் மூலமாக மட்டும் ஒப்பந்தபுள்ளி கோர வேண்டும் என்று உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

- மேலும் தங்களுடைய துறை மூலம் நடத்திய விசாரணை அறிக்கை எண். 223 முதல் 244/2023 நாள் 16.10.2023ன்படி முந்தைய ஒப்பந்தபுள்ளிகாரர்களிடம் பொருட்கள் கொள்முதல் செய்வது தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற சட்டம் மற்றும் விதிகளுக்கு புறம்பானது என்று அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

- ஆனால் பேரூராட்சி நிர்வாக அதிகாரிகள் எந்த துறை உத்தரவுகளையும் பின்பற்றாமல் தன்னிச்சையாக முடிவு செய்து கொள்கின்றனர்.

மேற்கண்ட இப்புகார்கள் குறித்து இப்பேரூராட்சி அலுவலக குறிப்பாணை ந.க.எண். 4539/2025(1.29)ப1 நாள் 15.05.2025 வாயிலாக உரிய விளக்கங்கள் கோரியதின்பேரில் 29

பேரூராட்சி செயல் அலுவலர்களிடமிருந்தும் வரப்பெற்ற அறிக்கைகள் தொகுக்கப்பட்டு அதன் விவரம் கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (TNTIT) சட்டம் **1998**ன் பிரிவு **16d**ன்பால் கனிவான கவனம் ஈர்க்கப்படுகிறது.

Section 16 – Exemptions

Nothing in this Act shall apply to procurement

(d) of low value and local purchases as may be prescribed:

அதன்படி, கீழ்க்கண்ட வகை கொள்முதல்களுக்கு இயல்பான டெண்டர் நடைமுறையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

- ➢ குறைந்த மதிப்பு மற்றும் உள்ளூர் கொள்முதல் (Low Value and Local Purchases) மேலும், TNTIT திருத்த விதிகள் **2023**ன்படி, e.tender முறையினை கட்டாயமாக்கும் விதி (Rule 4.A) நடைமுறைக்கு வந்த போதிலும், ரூ.**2** இலட்சத்திற்கும் குறைவான ஒற்றைப் பொருள் கொள்முதலுக்கு விலக்கு உண்டு.
- ➢ உள்ளாட்சி அமைப்புகளில் அன்றாட பொதுமக்களுக்கான சேவைகளுக்குத் தேவையான சுகாதார பணிகளுக்குரிய பொருட்கள் (Sanitation Materials), தெரு விளக்குகள் பராமரிப்பிற்கான மின் பொருட்கள் (Street Light Electrical Materials), மற்றும் குடிநீர் வழங்கல் பணிகளுக்கான குழாய் மற்றும் இணைப்புப் பொருட்களை (Water Supply Materials) பொருட்களை கொள்முதல் செய்வது அவ்வப்போதைய தேவைகளின் அடிப்படையில் தேவையான பொருட்களை மட்டும் கொள்முதல் செய்யும் ஒரு தொடர்ச்சியான நடைமுறையாக இருந்து வருகிறது. மேலும் இத்தகைய பொருட்கள் அளவிலும், விலையிலும் மற்றும் தேவையின் உடனடித் தன்மையிலும் முற்றிலும் ஒன்றிற்கொன்று வேறுபட்டவை ஆகும்.

  **சுகாதாரப் பணிகளுக்கு (Sanitation Materials) தேவைப்படும் கீழ்க்குறிப்பிட்ட பொருட்கள் சுகாதாரப் பணிகளுக்காக அவ்வப்போது தேவைப்படுகின்றன**:
- ➢ துடைப்பம் (Broom) குப்பை தொட்டி (Garbage Bin) / கிருமிநாசினி (Disinfectant/Bleaching Powder) / கழிவுமண் அகற்ற தேவையான, மண்வெட்டி, கோடாரி முதலானவை/கழிவுநீர் வடிகால் சுத்தம் செய்யும் கருவிகள் (Drain Cleaning Tools)

  **தெரு விளக்கு பராமரிப்பிற்கு (Street Light Materials) தேவையான பொருட்கள் அவ்வாறே பல்வகைப்பட்டவை ஆகும். உதாரணமாக,**
- ➢ LED பல்புகள் (LED Bulbs) – 9W, 12W, 18W, 24W, 36W, 45W, 72W பல்வேறு அளவுகளில்
- ➢ சாக்யேட், ஹோல்டர் (Lamp Holders/Sockets)
- ➢ மின்சார கம்பி (Electric Wire/Cable) – பல்வேறு sQ/mm அளவுகளில்

**குடிநீர் வழங்குதலுக்கான (**Water Supply Materials) தேவைப்படும் பொருட்கள் பொறுத்தவரை

- ➢ பல்வேறு விட்டங்களில் (Diameter) G1/PVC/HDPE குழாய்கள் (Pipes)
- ➢ கப்ளர், டீ எல்போ, ரிடியூசர் (Fitting accessories) முதலியன
- ➢ வால்வுகள் Gate Valve/Ball Valve/Butterfly Valve)
- ➢ சீல், இம்பெல்லர், ஷாப்ட் போன்ற மின்மோட்டார் பம்ப் பாகங்கள் (Pump Spare Parts)
- ➢ குடிநீருக்கான கிருமிநாசினிகள் (Disinfection Chemicals)

அரசு வழிகாட்டுதலின்படி மின்னணு டெண்டர் (e tender) முறை ரூ.**2.00** இலட்சம் மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்புள்ள ஒரு தனிப்பட்ட பொருளின் கொள்முதலுக்கே பொருந்தும்.

ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தேவைப்படும் பலதரப்பட்ட பொருட்களின் தேவை காரணமாக அவ்வப்போதைய தேவைக்கேற்ப கொள்முதல் செய்யப்படுவதாலும் இத்தகைய பன்முகத்தன்மை கொண்ட பொருட்களை பொறுத்தவரை அவற்றை ஒவ்வொன்றும் தனித்தனியே மதிப்பிடும்போது ரூ.2.00 இலட்சத்திற்கும் பலமடங்கு குறைவாகவே உள்ளதாலும் e tender நடைமுறையை பின்பற்ற வேண்டிய அவசியம் எழுவதில்லை.

மேலும், ஒவ்வொரு தேவையும் திட்டமிட்டதாக (planned expenditure) இல்லாமல் எதிர்பாராததாக (Non plan nature) அதாவது ஒரு மின் மோட்டார் பழுதடைவது அல்லது குடிநீர் குழாய் உடைவது அல்லது ஒரு தெருவிளக்கு பழுதடைவது போன்ற நிகழ்வுகளில் உடனடி நடவடிக்கை தேவைப்படுவதால் இதனை முன்கூட்டியே உத்தேசித்து கொள்முதல் செய்தல் சாத்தியமற்றதாகிறது என்பதனையும் மாண்பமை முறைமன்றத்திற்கு பணிவுடன் சமர்ப்பிக்க விழைகின்றேன்.

**பண்டக காப்பாளர் (Store Keeper Post) பணியிடங்கள் இல்லாமை**

உள்ளாட்சி அமைப்புகளில் அலுவலகங்களில் ஓராண்டிற்கு தேவையான அனைத்து பொருட்களையும் ஒரே நேரத்தில் கொள்முதல் செய்து பாதுகாத்து வைத்தல், தேவைப்படும் நேரங்களில் அவற்றை உரிய பணியாளர்களுக்கு வழங்கி இருப்பு விவர கணக்குகளை பதிவு செய்து வைத்துக்கொள்ள என தனியே பண்டக காப்பாளர் போன்ற பணியிடங்கள் எதுவும் தோற்றுவிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாகவும் அவ்வப்போதைய தேவைகளின் அடிப்படையில் மட்டுமே பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.

**பொருட்கள் சேமித்திட போதிய இடவசதி இல்லாமை**

பேரூராட்சி அலுவலகங்களை பொறுத்தவரை பொருட்களை ஒட்டுமொத்தமாக கொள்முதல் செய்து அவற்றை பாதுகாத்து வைப்பதற்கென தனியான களஞ்சிய அறை (store room) வசதியின்றி உள்ளன.

மேலும், பல்புகள் போன்ற மின்னணு பொருட்கள் ஈரப்பதம் மற்றும் வெப்பத்தால் சேதமுறும் அபாயம் / GI குழாய்கள் மற்றும் இரும்புப் பொருட்கள் வெளியில் வைப்பதினால் துருப்பிடிக்கும் வாய்ப்பு / கிருமி நாசினி போன்ற வேதிப் பொருட்கள் முறையான இடத்தில் சேமிக்கப்படாமையால் அவற்றை வீரியத் தன்மை குறைதல் மற்றும் வேதியியல் தன்மையால் ஏற்படும் ஆபத்துக்கள் முதலிய நிகழ்வுகளை தவிர்த்திடவும் ஒட்டுமொத்த கொள்முதல் போன்ற நிகழ்வுகள் தவிர்க்கப்படுகின்றன.

**செய்தித்தாள் விளம்பரம் மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு வெளிப்படைத்தன்மை பேணப்படுதல்**

பேரூராட்சிகளுக்கு தேவையான கொள்முதல் நடவடிக்கைகளில் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி (TNTIT) விதிகள் 2000ன்படி பின்வரும் வெளிப்படையான நடைமுறை பின்பற்றப்படுகிறது.

1. மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலரின் வழியே உள்ளூர் நாளிதழ்களில் ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன.
2. மேற்படி விளம்பரங்களின் அடிப்படையில் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் (Comparative Statement) தயாரிக்கப்படுகிறது.
3. இத்தகைய ஒப்புநோக்கு பட்டியல் ஒப்புதல் வேண்டி பேரூராட்சி மன்றத்தில் பொருட்குறிப்பு சேர்க்கப்பட்டு மன்ற கூட்டத்தின்போது அவை பின்வரும் அளவுகோல்களில் மதிப்பாய்வு செய்யப்படுகிறது.

குறைந்த விலை மட்டுமல்லாமல் பொருளின் தரம் மற்றும் தரப்படுத்தல் (Quality & Standard)

அரசு நிர்ணயித்த விலை விகிதம் (Government Schedule of Rates – அல்லது சந்தை விலையுடன் ஒப்பீடு) விநியோக நிறுவனத்தின் நம்பகத்தன் ஆகியவற்றினை

ஆய்வு செய்து அவற்றினை நிறைகுறைகளின் அடிப்படையில் முடிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும் புகார் மனுதாரரை பொறுத்தவரை மேற்படி நிறுவனம் பெரும்பான்மையான பொருட்களுக்கு சந்தை மதிப்பு அல்லது அரசு நிர்ணய விலையினை விட மிக குறைவாக சுமார் 10 சதவிகிதத்திலிருந்து 100 சதவிகிதம் வரை குறைவாக குறிப்பிட்டு உள்ளதால் இதன் விநியோக சாத்தியக் கூறுகள் மற்றும் அதன் தரத்தினை உறுதி செய்தல் ஆகியன எவ்வாறு சாத்தியமாகும் என்பது மேற்படி நிறுவனத்தின் நோக்கத்தினையும் எவ்வாறேனும் ஒப்பந்தத்தை கைப்பற்றி விட வேண்டும் என்ற வேகத்துடன் செயல்படும் நிலையானது சந்தேகத்தினை ஏற்படுத்துகிறது.

இவ்வாறு ஒப்பந்தத்தை பெறும் மேற்படி நிறுவன்த்துடன் ஓராண்டுக்கான ஒப்பந்தம் நிறைவேற்றிக்கொள்ளும் பட்சத்தில் அவசர தேவைக்கென பொருட்கள் கொள்முதல் செய்யப்படும் நிகழ்வுகளில் அவற்றின் தரக்குறைவு அதனை சுட்டிக்காட்டி அந்நிறுவனத்துடன் கடிதம் போக்குவரத்து மேற்கொண்டு மாற்றுப் பொருள் சப்ளை செய்யக் கேட்டல், அதனை பெற்று அதன் தரத்தை சோதித்தல் முதலியன பொதுமக்களுக்கான சேவையினை கடுமையாக பாதிக்கும் என்பதனையும் மன்றக் கூட்டங்களில் கருத்திற்கொள்ளப்படுகின்றன.

மேலும் மேற்கண்டவாறு தரமற்ற பொருட்களை செய்வதால் அந்நிறுவனத்தை கருப்புப் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளுதல், மறுஒப்பந்தப்புள்ளி கோருதல், பின்னர் அதனை பரிசீலித்து மன்ற ஒப்புதல் பெறுதல் தேவையற்ற கால விரயத்தை ஏற்படுத்தும் என்பதையும், இதனாலும் பொதுமக்களுக்கான சேவை வழங்குதல் கடுமையாக பாதிப்புக்குள்ளாகும் என்பதனையும் இங்கு நோக்க தகுந்ததாகும்.

தற்போது, பெரும்பான்மையான பேரூராட்சிகளில் பின்பற்றப்படும் மேற்படி நடைமுறையானது தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி (TNTIT) சட்டம் 1998ன் பிரிவு 16ன் கீழ் உள்ளாட்சி அமைப்புகளுக்கு விலக்கு அளிக்கப்பட்ட கொள்முதல் முறையுடன் ஒத்துப்போகிறது. மேலும் செய்தித்தாள் விளம்பரம் மூலம் நடைபெறும் டெண்டர் நடைமுறையானது (e Tender) நடைமுறையினை பின்பற்றுவதனை பார்க்கிலும் மேலும் பரந்து விரிந்த பொதுமக்கள் பங்கேற்பை உறுதிப்படுத்துகிறது. ஏனெனில், இணையவசதி இல்லாத சிறு அளவிலான நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் விநியோகஸ்தர்களும் பங்குகொள்ள வாய்ப்பு கிட்டுகிறது.

மேலும், பேரூராட்சி செயல் அலுவலர்களின் அடிப்படையில் நடவடிக்கை விவரம் கீழ்க்கண்டவாறு தொகுக்கப்பட்டு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

பேரூராட்சிகளின் விரிவான விளம்பரங்கள் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மூலம் நாளிதழ்களில் மேற்கொண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. சில இனங்களில் இணையதள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பு நோக்கப்பட்டு அரசு நிர்ணய விலையினை விட மிகவும் குறைவாக மதிப்புடைய நிகழ்வுகளின் அதன் சாத்தியமின்மை மற்றும் அத்தகைய ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிப்பின் காரணமாக தரமற்ற பொருட்களின் விநியோகம் அதன் காரணமாக பொதுமக்களின் அதிருப்தி மற்றும் சேவை குறைபாடு ஆகியன கருதி அத்தகைய குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் மன்றங்களால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் கொண்ட மன்றங்களின் அங்கீகாரம் இன்றி எத்தகைய செலவினங்களும் நிருவாக முடிவுகளும் மேற்கொள்ள இயலாது என்ற சட்டப்பூர்வ காரணங்களால் மன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் பேரூராட்சிகள் செயல்பட்டு வருகின்றன.

பொது நிதியின் கையிருப்பு பண்டக காப்பாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படாமை போதிய சேமிப்பு அறைகள் இல்லாமை முதலியன காரணங்களால் அவ்வப்போதைய தேவைகளின்

அடிப்படையில் தேவைப்படும் பொருட்கள் மட்டும் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலே விவரிக்கப்பட்ட அனைத்து காரணங்களினை தொகுத்து பார்க்கும்பொழுது பேரூராட்சிகளின் பொது சுகாதாரம், தெருவிளக்கு மற்றும் குடிநீர் வழங்கல் பொருட்களுக்கான கொள்முதலில் e tender நடைமுறை பின்பற்றாமை அரசின் ஒப்பந்தப்புள்ளி சட்டம், விதிகள் மற்றும் அவற்றின் திருத்தங்கள் ஆகியவற்றிற்கு உட்பட்டே உள்ளன என்பதுடன் முறையாக நாளிதழ்களில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மன்ற ஒப்புதலுடன் தேவைக்கேற்ப அவ்வப்போது தேவைப்படும் பொருட்களை மட்டும் கொள்முதல் செய்து பயன்படுத்தப்படுவதால் வெளிப்படைத் தன்மை உறுதி செய்யப்பட்டு தேவையற்ற மற்றும் தரமற்ற பொருட்களை கொள்முதல் செய்வதனை தவிர்த்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதனை மாண்பமை முறைமன்ற நடுவத்தின் கனிவான பரிசீலனைக்காக பணிவுடன் சமர்ப்பித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

8. மனுதாரர் திரு. A. வசந்தராஜன் மற்றும் அவருக்கு உதவியாக திரு. எம். பழனி ஆகியோர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 19.05.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தங்களது வாக்கு மூலத்தை அளித்துள்ளனர். அதில் –

- " 2023-24 மற்றும் 2024-25ஆம் ஆண்டுகளிலிருந்து தூத்துக்குடி மாவட்டத்தில் செயல்படும் பேரூராட்சிகளில் இணையதளம் ஒப்பந்தப்புள்ளி கோரப்படவில்லை.

1. <u>திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகள் (29 பேரூராட்சிகள்)</u>

2025-26ஆம் ஆண்டிற்கு திருநெல்வேலி மண்டலம் பேரூராட்சிக்கு உட்பட்ட 29 பேரூராட்சிகளுக்கு தேவையான பொது சுகாதாரம் பொருட்கள், தெருவிளக்கு பொருட்கள் மற்றும் குடிநீர் பொருட்களுக்கு கொள்முதல் செய்ய ஒப்பந்தப்புள்ளிகள் தனித்தனியாக 29 பேரூராட்சிகளின் இணையதளம் வாயிலாக ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளேன். ஆனால் கீழ்க்காணும் 17 பேரூராட்சிகளில் இன்று வரை இணையதள ஒப்பந்தப்புள்ளிகளை பரிசீலனை செய்யாமல் நிலுவையில் வைக்கப்பட்டுள்ளன. நிலுவையில் உள்ள 17 பேரூராட்சிகளின் விபரம் பின்வருமாறு:

1. ஆறுமுகநேரி பேரூராட்சி
2. ஆழ்வார்திருநகரி பேரூராட்சி
3. தென்திருப்பேரை பேரூராட்சி
4. கானம் பேரூராட்சி
5. எட்டையபுரம் பேரூராட்சி
6. ஏரல் பேரூராட்சி
7. ஸ்ரீவைகுண்டம் பேரூராட்சி
8. வி. புதுார் பேரூராட்சி
9. விளாத்திக்குளம் பேரூராட்சி
10. சிவகிரி பேரூராட்சி
11. S. புதூர் பேரூராட்சி
12. இலஞ்சி பேரூராட்சி
13. கீழ்ப்பாவூர் பேரூராட்சி
14. அச்சன்புதுார் பேரூராட்சி
15. கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி
16. மணிமுத்தாறு பேரூராட்சி
17. நாரணம்மாள்புரம் பேரூராட்சி

2. <u>மதுரை மண்டலம் பேரூராட்சிகள்</u>

மதுரை மாவட்டத்தில் செயல்படும் கீழ்க்காணும் 9 பேரூராட்சிகளில் 2023-24 மற்றும் 2024-25 ஆகிய ஆண்டுகளில் இணையதளம் ஒப்பந்தப்புள்ளி கோரப்படவில்லை.

1. அலங்காநல்லூர் பேரூராட்சி
2 ஏழுமலை பேரூராட்சி
3 சோழவந்தான் பேரூராட்சி
4 பரவை பேரூராட்சி
5 பாலமேடு பேரூராட்சி
6 T. கல்லுப்பட்டி பேரூராட்சி
7. வாடிப்பட்டி பேரூராட்சி
8. வல்லாளப்பட்டி பேரூராட்சி
9. பேரையூர் பேரூராட்சி

3. <u>சிவகங்கை மண்டலம் பேரூராட்சி</u>

சிவகங்கை மாவட்டத்தில் செயல்படும் புதுவயல் பேரூராட்சியில் 2025-26ஆம் ஆண்டிற்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் தகுதியற்ற அலமேலு பேன்சி ஸ்டோர் என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி (Agreement of Contract) வழங்கப்பட்டுள்ளது.

- ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யாத கரரணத்தினால் எனது நிறுவனத்தின் மூலம் நான் செலுத்திய ஒப்பந்தப்புள்ளி டேவணித் தொகை ரூ.10,43,205/- நிலுவையில் உள்ளது. ஆகையால் இனிவருங்காலங்களில் இணையதளம் வாயிலாக கோரப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை காலம் தாழ்த்தாமல் ஒப்பந்தப்புள்ளியினை இறுதி செய்து பணியாணை வழங்கிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

9. முதலாம் எதிர்மனுதாரரான திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு. சா. கிறிஸ்டோபர்தாஸ் மற்றும் அவர் சார்பாக திருநெல்வேலி மாவட்டம், கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் திரு. அ. பாலசுந்தர் ஆகியோர் 19.05.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை அளித்துள்ளனர். அதில் –

- திருநெல்வேலி பேரூராட்சிகள் மண்டலத்தில் உள்ள பேரூராட்சிகளில் 29 பேரூராட்சிகள் மட்டும் அரசாணை எண். 94, நிதி (ஊதியம்) துறை, நாள் 30.05.2023ன்படி இணையதளத்தின் மூலமாக பேரூராட்சிகளின் அன்றாட தேவைகளுக்கான பொருட்கள் கொள்முதல் செய்யவோ அல்லது இணையதளத்தில் கோரப்பட்டவற்றை இறுதி செய்யாமலே உள்ளனர். இதனால் ஒப்பந்தப்புள்ளி அளித்த மனுதாரருக்கு கிடைக்கப் பெற வேண்டிய ஒப்பந்த டேவணித் தொகை திரும்ப கிடைக்கப் பெறாமல் உள்ளது என தெரிவித்துள்ள மனுதாரரது புகாரினை மறுக்கிறோம். ஏனெனில் இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட சில பேரூராட்சிகளிலும் அவை திறக்கப்பட்டு அதனை ஒப்புநோக்கப்பட்டு பேரூராட்சி மன்ற ஒப்புதலுக்காக வைக்கப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவற்றில் அடுத்த கட்ட நடவடிக்கையான இணையதளத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் மறுக்கப்பட்ட விவரங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படவில்லை என முறைமன்றத்தின் முன்னர் மனுதாரர் முன்வைத்துள்ள புகார் குறித்து ஆய்வு செய்யப்படும் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

- பேரூராட்சிகளில் தனியே பண்டக காப்பாளர் (Store Keeper) என்ற பணியிடமோ மற்றும் பொருட்களை சேமித்து வைக்கும் பண்டக சாலையோ (Store Room) இல்லாத காரணத்தினால் பொது சுகாதாரம், குடிநீர் வழங்கல் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு ஆகிய பொதுமக்களுக்கான சேவைகளை வழங்கிட அவ்வப்போதைய தேவைக்கேற்ப குறைந்த அளவில் தேவைப்படும் பொருட்களை மட்டும் கொள்முதல் செய்யும் நடவடிக்கை பின்பற்றப்பட்டு வருகின்றன. ஆண்டு முழுமைக்கும் இத்தகைய தேவைகளுக்கு ஒவ்வொரு முறையும் Tamil Nadu Finance Codeல் Stores என்ற தலைப்பின் கீழ் குறைந்த எண்ணிக்கையிலான கொள்முதலுக்கு வழங்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி கொள்முதல் செய்யப்படுகின்றன. இணையதளத்தின் வாயிலாக கொள்முதல் செய்ய வேண்டிய நிலை எழவில்லை என்ற காரணத்தினால் இத்தகைய நடைமுறை பின்பற்றப்பட்டு வருகிறது. இதனையும் தற்போது அரசு ஆணை எண். 262, நிதி (கொள்முதல் பிரிவு) துறை, நாள் 05.12.2025ன்படி உறுதியும் செய்யப்பட்டுள்ளது. மேலும் கொள்முதல் குறித்து வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி அழைப்பு மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் வழியே நாளிதழ்களில் பிரசுரிக்கப்பட்டு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை பின்பற்றப்படுகிறது. எனவே, செயல் அலுவலர்களின் கொள்முதல் நடைமுறை எவ்வித அரசு விதிமுறைகளையும் மீறவில்லை என்பதனை பணிவுடன் சமர்ப்பிக்கிறோம்.

- மேலும் மனுதாரரின் கோரிக்கையான ஒப்பந்தப்புள்ளி மீது மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை இணையத்தில் பதிவேற்றம் செய்யும் நடவடிக்கையினை இனிவருங்காலங்களில் உறுதி செய்யப்பட ஆவன மேற்கொள்ளப்படும் என்பதையும் இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

10. மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு. ந. மணிகண்டன் என்பவர் தனது 18.05.2026 நாளிட்ட கடிததத்தில் தனக்கு கண் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளதால் , 19.05.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு வர இயலாது எனவும், தனது சார்பாக மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் உதவியாளர் திரு. சு. பாலகிருஷ்ணன் என்பவரை விசாரணைக்கு ஆஜராக அனுமதி அளிக்குமாறு வேண்டி கொண்டுள்ளார். அவரது கோரிக்கையை இம்முறைமன்ற நடுவம் ஏற்று, அதன்படி திரு. சு. பாலகிருஷ்ணன் என்பவர் 19.05.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார். அதில்

- மனுதாரர் புகாராக தெரிவிக்கும் மதுரை மாவட்டத்திலுள்ள 1. அலங்காநல்லூர் பேரூராட்சி, 2. ஏழுமலை பேரூராட்சி, 3. சோழவந்தான் பேரூராட்சி, 4. பரவை பேரூராட்சி, 5. பாலமேடு பேரூராட்சி, 6. T. கல்லுப்பட்டி பேரூராட்சி, 7. வாடிபட்டி பேரூராட்சி. 8. வல்லாளப்பட்டி பேரூராட்சி மற்றும் 9. பேரையூர் பேரூராட்சி ஆகிய 9 பேரூராட்சிகளிலும் 2022-23ஆம் ஆண்டிற்கு தெருவிளக்கு உபகரணங்கள், பொதுசுகாதார தளவாட சாமான்கள், குடிநீர் உபகரணங்கள் ஆகியவை சப்ளை செய்வதற்கு, நாளிதழில் விளம்பரம் மூலமாகவும் மற்றும் பழைய ஒப்பந்ததாரர்களுக்கு உரிய அறிவிப்பு அனுப்பப்பட்டும், ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. அதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனங்களுக்கு பேரூராட்சி மன்ற தீர்மானத்தில் அங்கீகரிக்கப்பட்டன.

- இதனைத் தொடர்ந்து 2023-24, 2024-25 மற்றும் 2025-26ஆம் ஆண்டுகளில் மேற்காணும் 9 பேரூராட்சிகளிலும் குடிநீர் விநியோகம், தெருவிளக்கு,

பொதுசுகாதாரம் மற்றும் பொருட்கள் சப்ளை செய்தல் தொடர்பாக 2022-23ஆம் ஆண்டில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்து அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்தே கடந்த ஆண்டு விலை விகிதத்திலேயே பொருட்களை கொள்முதல் செய்திட 2023–24, 2024-25 மற்றும் 2025-26 ஆண்டுகளில் மன்ற தீர்மானத்தின்படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதனால் பேரூராட்சிகளுக்கு நிதியிழப்பு ஏற்படவில்லை.

- இதனைத் தொடர்ந்து 2026-27ஆம் ஆண்டிற்கு பொருட்களை கொள்முதல் செய்வதற்கு 1. பரவை, 2. அலங்காநல்லூர், 3. சோழவந்தான், 4. பாலமேடு, 5. பேரையூர் மற்றும் 6. ஏழுமலை ஆகிய பேரூராட்சிகளில் இணையதளம் மூலம் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரி அறிவிப்பு வெளியிடப்பட்டது. தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடவடிக்கையில் இருந்ததால் இப்பேரூராட்சிகளின் ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்து ஒப்புதல் வழங்க இயலாத நிலையில் இருந்தது. தற்போது இந்த பேரூராட்சிகளில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளை அங்கீகரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மீதமுள்ள வாடிப்பட்டி, அ. வல்லாளபட்டி மற்றும் தே. கல்லுப்பட்டி ஆகிய பேரூராட்சிகளில் இணையதளம் வாயிலாக ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

11. சிவகங்கை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரான திரு. வில்லியம் ஜேசுதாஸ் என்பவர் தனது 18.05.2026 நாளிட்ட கடித ந.க.எண். 2728/டி1ல் நான் 18.05.2026 பிற்பகல் முதல் சிவகங்கை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநராக கூடுதல் பொறுப்பேற்று உள்ளதால், தனது சார்பாக புதுவயல் பேரூராட்சி செயல் அலுவலரை 19.05.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராக அனுமதி அளிக்குமாறு வேண்டி கேட்டுக் கொண்டுள்ளார். இவரது கோரிக்கை இம்முறைமன்ற நடுவத்தால் ஏற்கப்பட்டு, அதன்படி புதுவயல் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. சே. உமாமகேஸ்வரன் என்பவர் 19.05.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார். அதில்

- சிவகங்கை மாவட்டம், புதுவயல் பேரூராட்சியில் 2025-26ஆம் ஆண்டிற்கு 04.04.2025 முதல் 31.03.2026 காலத்திற்கு பேரூராட்சி பொது சுகாதாரம், குடிநீர் விநியோக பராமரிப்பு, தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணி உள்ளிட்ட பணிகளுக்கு இப்பேரூராட்சிக்கு பொருட்கள் சப்ளை செய்வதற்கு, தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-ன்படி ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் மூலம் பெறப்படுவதற்கு இணையதளத்தில் வெளியிடப்பட்டும் மற்றும் நாளிதழ் பேரூராட்சி அலுவலக அறிவிப்பு பலகை மற்றும் பேரூராட்சிக்குட்பட்ட அரசு அலுவலகங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு அனுப்பப்பட்டது.

- இணையதளம் மூலமாகவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்த நிறுவனங்களை தேர்வு செய்யப்பட்டு, பேரூராட்சி மன்ற தீர்மானத்தின் மூலம் ஒப்புதல் பெறப்பட்டு, பணி ஆணையும் இணையதளம் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

- எனவே 2025-26ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் எவ்வித முறைகேடுகளும், விதிமீறலும் நடைபெறவில்லை என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

- மனுதாரர் இன்று நடைபெற்ற விசாரணையின்போது **2025-26**ஆம் ஆண்டிற்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் தகுதியற்ற அலமேலு பேன்சி ஸ்டோர் என்ற நிறுவனத்திற்கு Agrement of Contract வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்த புகாருக்கு ஒப்பந்தப்புள்ளியில் மேற்படி நிறுவனம் அனைத்து ஆவணங்களையும் சரியாக பதிவேற்றம் செய்துள்ளார். ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளிகளுக்கான அனைத்து தகுதிகளும் சரியாக உள்ளதால் அந்நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது தொடர்பாக மனுதாரர் கடிதம் மூலம் தகவல் கோரும்பட்சத்தில் அதற்கான தகவலை கடிதத்தின் வாயிலாக வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.
- மேலும் இம்முறைமன்ற நடுவத்தில் சிவகங்கை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் சமர்ப்பித்துள்ள **14.10.2025** நாளிட்ட அறிக்கை ந.க.எண். **2728/2025/டி1**ல் தெரிவித்துள்ள விளக்கத்தினையும் மேல்வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளுமாறு இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

12. மனுதாரரின் புகார் மனுக்கள், அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரர்களான மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்களின் அறிக்கைகள் மற்றும் வாக்குமூலங்கள் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் தனது முறையீட்டு மனுக்களில் திருநெல்வேலி, மதுரை மற்றும் சிவகங்கை மண்டல பேரூராட்சிகளுக்குட்பட்ட **39** பேரூராட்சிகளில் **2025-26**ஆம் ஆண்டிற்கு பேரூராட்சிக்கு தேவையான பொது சுகாதாரம் பொருட்கள், தெருவிளக்கு பொருட்கள் மற்றும் குடிநீர் பொருட்கள் கொள்முதல் செய்ய, சில பேரூராட்சிகளில் ஒப்பந்தப்புள்ளி கோரப்படாமலும் மற்றும் சில பேரூராட்சிகளில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக தெரிவித்திருப்பதை மனுதாரரின் புகார் மனுக்கள் மூலம் தெரிய வருகிறது.

இதனை தொடர்ந்து, திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளுக்குட்பட்ட புகாராக தெரிவிக்கப்பட்ட **29** பேரூராட்சிகளில் **17** பேரூராட்சிகளில் இந்நாள்வரை இணையதள ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்படவில்லை எனவும் மதுரை மண்டலத்தில் அமைந்துள்ள **9** பேரூராட்சிகளில் **2023-24** மற்றும் **2024-25**ஆம் ஆண்டுகளில் ஒப்பந்தப்புள்ளி கோரப்படவில்லை எனவும் மற்றும் சிவகங்கை மண்டலத்திற்குட்பட்ட புதுவயல் பேரூராட்சியில் **2025-26**ஆம் ஆண்டில் தகுதியற்ற நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட்டது எனவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்படாத காரணத்தினால் தான் செலுத்திய ஒப்பந்தப்புள்ளி டேவணித் தொகை ரூ.**10,43,205** நிலுவையில் உள்ளதாக என தெரிவித்திருப்பதை மனுதாரரின் வாக்குமூலத்தில் இருந்து அறிய முடிகிறது.

<u>திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகள் நேர்வில்</u>

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளில் ஒரு ஆண்டிற்கு தேவையான பொது சுகாதார பொருட்கள், தெருவிளக்கு பராமரிப்பு பொருட்கள் மற்றும் குடிநீர் வழங்கல் பொருட்கள் சேமித்து வைக்கக் போதிய பண்டக சாலை (store room) மற்றும் பண்டக காப்பாளர் (store keeper) பணியிடம் இல்லாத காரணத்தினால் அவ்வப்போதைய தேவைகளின் அடிப்படையில் குறைந்த அளவில் கொள்முதலுக்கு வழங்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி பொருட்கள் கொள்முதல் செய்யப்படுவதால் இணையதள வாயிலாக கொள்முதல் செய்ய வேண்டிய நிலை எழவில்லை எனவும், இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட சில பேரூராட்சிகளில் ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்பட்டு பேரூராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது எனவும் ஆனால் பேரூராட்சிகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் மறுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்தான விவரங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவும் நடவடிக்கையினை இனி

வருங்காலங்களில் உறுதி செய்யப்படும் என தெரிவித்திருப்பதையும் திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அளித்த வாக்குமூலத்தின் வாயிலாக அறிய வருகிறது.

<u>மதுரை மண்டல பேரூராட்சிகள் நேர்வில்</u>

மனுதாரர் புகாராக தெரிவித்துள்ள மதுரை மண்டலத்திற்குட்பட்ட 9 பேரூராட்சிகளில் 2022-23ஆம் ஆண்டிற்கு பொது சுகாதாரம், தெருவிளக்கு மற்றும் குடிநீர் உபகரணங்கள் சப்ளை செய்வதற்கு உரிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனங்களின் மூலமாகவே 2023-24, 2024-25 மற்றும் 2025-26ஆம் ஆண்டுகளில் பொருட்களை கொள்முதல் செய்திட மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் கொள்முதல் செய்யப்பட்டது எனவும் இதில் பேரூராட்சிகளுக்கு எவ்வித நிதியிழப்பும் ஏற்படவில்லை எனவும் தெரிவித்திருப்பதை மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலக உதவியாளரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

<u>சிவகங்கை மண்டல பேரூராட்சி (புதுவயல் பேரூராட்சி) நேர்வில்</u>

சிவகங்கை மாவட்டம், புதுவயல் பேரூராட்சியில் 2025-26ஆம் ஆண்டிற்கு உரிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பொது சுகாதாரம், குடிநீர் விநியோகம் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு பொருட்கள் ஆகியவை குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய தகுதி வாய்ந்த அலமேலு பேன்சி ஸ்டோர் என்ற நிறுவனம் மூலம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என தெரிவித்திருப்பதை புதுவயல் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளுக்குட்பட்ட 29 பேரூராட்சிகள், மதுரை மண்டல பேரூராட்சிகளுக்குட்பட்ட 9 பேரூராட்சிகள் மற்றும் சிவகங்கை மண்டல பேரூராட்சிகளுக்குட்பட்ட புதுவயல் பேரூராட்சி ஆகிய பேரூராட்சிகளில் 2025-26ஆம் ஆண்டில் பேரூராட்சிக்கு தேவையான பொது சுகாதாரம் பொருட்கள், தெருவிளக்கு பொருட்கள் மற்றும் குடிநீர் பொருட்களுக்கு கொள்முதல் செய்வதற்கு கோரிய ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யாத காரணத்தினால் மனுதாரரின் நிறுவனத்தின் மூலம் செலுத்திய ஒப்பந்தப்புள்ளி டேவணித் தொகை ரூ.10,43,205 நிலுவையில் உள்ளது என தெரிவித்துள்ள நிலையில், பிரிவு 12(1)(d), தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம், 2014ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மேற்காணும் 39 பேரூராட்சிகளிலும் ஒப்பந்தப்புள்ளி நேர்வுகளில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை என்பதை உறுதி செய்திடும் வகையில் பேரூராட்சிகளின் இணை இயக்குநர் தலைமையில் ஒரு குழுவினை அமைத்து இது குறித்து விசாரணை மேற்கொண்டு அதன் அறிக்கையை 3 மாத காலத்திற்குள் பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இணை இயக்குநரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும், மனுதாரர் புகாராக தெரிவித்துள்ள 39 பேரூராட்சிகளிலும் 2025-26ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பொருட்கள் கொள்முதல் செலவினத்தில் எவ்வித நிதியிழப்பும் ஏற்படவில்லை என்பதை உறுதி செய்திடும் வகையில் உள்ளாட்சி நிதி சிறப்பு தணிக்கை குழு மூலம் தணிக்கை செய்து அதன் அறிக்கையை 3 மாத காலத்திற்குள் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி நிதி தணிக்கை துறை இயக்குநருக்கு பரிந்துரை செய்யலாம் எனவும் இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 21 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. A. வசந்தராஜன்,
27/1, ஜீவானந்தம் தெரு, செல்லூர், மதுரை - 2

2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திருநெல்வேலி மண்டலம், திருநெல்வேலி.

3. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், மதுரை மண்டலம், மதுரை.

4. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
சிவகங்கை மண்டலம், சிவகங்கை.

5. உள்ளாட்சி நிதித் துறை இயக்குநர், நந்தனம், சென்னை-35

6. பேரூராட்சிகளின் இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநரகம், இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

7. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்) பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்